# பீட்டர் இங்கிலீஷ்

- மைக்கல்

“ … அண்ட் ஐ வெல்கம் ஆல் மை ஸ்டூடண்ட் ஃப்ரண்ட்ஸ்.” என்று தமிழ் பேசி முடிக்கவும் பீட்டர் மட்டும் கைத்தட்டாமல் தன் அருகே இருந்த அபிஷேக்கிடம் ஏதோ முணுமுணுத்தான் . விழாத்தலைவருக்கு தலைமையாசிரியர் பொன்னாடை போர்த்தும் போது பீட்டர் அந்த மரபெஞ்ச்சில் உட்கார முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

தமிழ்ச்செல்வன் இந்த ஆண்டு தான் பதினொன்றாம் வகுப்பில் வந்து சேர்ந்திருக்கிறான். டெல்லியில் பிறந்து வளர்ந்த அவன் தன் அப்பாவின் இடம் மாறுதல்கள் காரணமாகப் பல நகரங்களில் பல பள்ளிகளைக் கண்டவன் . அவனுடைய சகலகலாத்திறமைகளைக் கூட பீட்டரால் அலட்சியம் செய்துவிடமுடியும் ஆனால் இங்கிலீஷில் பிளந்து கட்டும் தமிழ்ச்செல்வனை அவனால் ஏதாவது செய்யாமல் இருக்கமுடியாது போல இருந்தது.

ஆசிரியர்களில் சிலர் கூடத் தடுமாறும்போது ஒரு புன்னகையுடன் சரளமாக அவன் பேசும் இங்கிலீஷ் பீட்டரின் புகழைக் கொஞ்ச ம்…அதிகமாகவே மங்கச்செய்துவிட்டது . கரண்ட் வந்தபிறகு கேட்பாரற்று நிற்கும் மெழுகுவர்த்தி போ ல. யாராவது ஊதினால் அணைந்துவிடுவோமோ என்று அசைந்து கொண்டிருந்தான்.

பீட்டரின் அப்பா அதே பள்ளியில் ஆசிரியர். 'வாத்தியார் பையன்' கோட்டாவில் பள்ளியின் எல்லா சீன் காட்ட வாய்ப்புள்ள நடவடிக்கைகளிலும் அவனுக்கு ஒரு முக்கிய இடம் இருக்கும். அவனது திறமைகளுக்கு அதிகமாகவே அவன் சாதித்துக்கொண்டிருந்தான்… தமிழ் வரும் வரை….

பீட்டரிடம் தமிழ் அன்பாகப் பழகினாலும் பீட்டரால் அவனுடன் ஒத்துப் போகமுடியவில்லை . பனிப்போர் மிகச் சூடாகிக்கொண்டே போனது.

'இங்கிலீஷ் க்ள ப்' ஆரம்பிக்க தமிழ் முயற்சி எடுத்து அதன் ஆரம்ப விழாவில் நடத்துனராக 'மைக்'கைப்பிடித்து தமிழ் பந்தா பண்ணுவது பீட்டரின் தொண்டை மூக்கு காதுகள் வழியாக உஷ்ணக்காற்றைப் பீச்சியடித்துக் கொண்டிருந்தது.

“பீட்டர், இங்கிலீஷ் க்ள ப்-ல நீ ஒரு ஸ்டோரி சொல்றிய ா? ஒரு வாரம் எங்கூடப் பேசிட்டு இருந்தீன்னா உன்னோட இங்கிலீஷ் நல்லா வந்துரு ம்.” போன வாரம் 'மாரல் க்ளாஸ் முடியும் போது தமிழ் தனது மானம் மரியாதை எல்லாவற்றையும் பலர் முன்னால் வேண்டுமென்றே தமிழ் உடைத்ததாக உணர்ந்தான் பீட்டர்.

தமிழ்ச்செல்வனைப் பழிவாங்க ஒரு திட்டமும் வைத்திருக்கிறான் பீட்டர்.

சிறப்பு விருந்தினராக வந்திருந்த அரசுக் கலைக்கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் ' ஆங்கிலம் ஒரு உலக மொழி என்றும் அதில் புலமை பெறுவது உலக அரங்கில் நாம் முன்னேற சிறந்த வழி என்றும்' பல உதாரணங்களுடன் விளக்கிக்கொண்டிருக்க , பீட்டர் ஒரு இம்மித் தூக்கமும் அதில் ஒரு மைக்ரோ கனவும் கண்டு முடித்திருந்தான். இங்கிலாந்தில் தமிழின் பெருமைகள் பற்றி ஆங்கிலத்தில் பீட்டர் பேசுவதாகவு ம், தமிழ் அங்கே நாற்காலிகளை அடுக்கிக் கொண்டிருப்பதாகவும் அபிஷேக் தொடையில் தட்டியதால் முடிவு இல்லாமல் முற்றுப்பெற்றது அந்தக் கனவு.

ஒரு வழியாக ஆங்கிலக் கழகக் கூட்டம் முடிந்து மதிய உணவு நேரத்தில் தமிழ் பீட்டரை நோக்கி வந்தான். அபிஷேக் புயல் அறிவிப்பைக் கேட்டவன் போல விலகிக் கொள்ள தமிழ் அவனிடம் கேட்டான், “ பீட்டர் எனக்கு தமிழ் கஷ்ட்டமா இருக்கு. யாருமே தமிழுக்குன்னு ட்யூஷன் எடுக்கற

மாதிரி தெரியல . வாரத்துக்கு ஒரு நாள் ரெண்டு மணி நேரம் நான் உங்க வீட்டுக்கு வந்து கத்துக்கலாமா? இப்பவே ஆரம்பிச்சாத்தான் ப்ளஸ் டூ வரும்போது மார்க் வாங்க முடியும்."

பீட்டர் இரண்டு நிமிடங்கள் அமைதியாக இருந்தான். கிழக்கிந்தியக் கம்பெனி முதலாக இங்கிலீஷ் பேசுபவர்கள் எல்லாருமே எதிரிகள் என்று நினைத்திருந்த பீட்டரால் இந்த அதிர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியவில்லை . 'ஒரு வேளை இன்னும் இவன் ஏதாவது அவமானப்படுத்த திட்டம் வைத்திருக்கிறானா?'

பீட்டரின் தோளில் வலக்கையைப் போட்டுக்கொண்டே தமிழ் கேட்டான் , "என்ன? ரொம்ப யோசிக்கிற மாதிரி இருக்கு?"

"தமிழ் நானும் உங்கிட்ட இங்கிலீஷ் பேசறதுக்கு கத்துக்கலாமா?" பீட்டர் மெதுவாகக் கேட்டான்.

"நான் ட்யூஷன் ஃபீஸ் கேப்பேனே?" சத்தமாகச் சிரித்தான் தமிழ்.

"என் ஃபீஸுக்கு ம்... உன் ஃபீஸுக்கு ம்.... ஆனைக்கும் பானைக்கும் சரி ." பீட்டரின் சிரிப்பில் உண்மை இருந்தது.